1972 ஆகஸ்ட் 11]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி கேளுங்கள், பேச்சாக ஆரம்பித்துவிட்டீர்களே.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஆகவே இந்தத் திட்டத்தை பஞ்சப் பட்டிக்கு நீட்டித்துத் தர அரசு பரிசிலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஏற்கனவே அத்திட்டம் பற்றி முடிவு செய்யப்பட்டு வேலை தொடங்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்களின் கருத்து சாத்தியமானதாக இருந்தால் பரிசீலித்துப் பார்க்கலாம்.

'அதிகாரி' கண்மாய்

*75 வினா—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றிய எல்லைக்குள் உள்ள அதிகாரி கண்மாயினை மராமத்து செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) ஒப்ப அறிவிப்புகள் உறுதிப் படுத்தப்பெற்றபின், வேலை துவங்கப் பெறும்.

**திரு. நா. வெ. குருசாமி :** தற்சமயம் அந்தக் கண்மாயில் வேலை நடந்து கொண்டிருக்கிறது கடந்த ஒரு மாத காலமாக. ஆனால் அந்தக் கால்வாயை வெட்டும்போது சிலர் இடையூறு செய்கிறார்கள். அவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்து அந்தக் கால்வாயை விரைவில் சீரமைக்க ஆவன செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இடையூறுகள் நடைபெறாத அளவிற்கு உறுப்பினர் அவர்கள் ஒத்துழைப்பு தந்து நடவடிக்கைகள் எடுத்தால் அதிகாரிகள் விரைவாக நிறைவேற்றித் தருவார்கள்.

*Aruppukottai Tank*

* 76 Q.—THIRU SOWDI S. SUNDARA BHARATHI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether any permission was given by Public Works Department authorities to cut open the bund of Aruppukottai

Periakanmoi tank and drain the water in the tank to the detriment of ayacut lands in the month of May, 1972 to the contractor who has undertaken to deepen the tank; and

(b) if not, the action taken in the matter ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) :** 1972-ம் ஆண்டு மே மாதம் அருப்புக்கோட்டை கண்மாய் பொதுப்பணித் துறையினரால் தகுந்த அளவிற்கு செப்பனிடுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. நெற்பயிர் அறுவடைகள் ஆகி பக்குவ நிலையில் இருந்தால் மண் வேலை செய்வதற்கு ஏதுவாக கண்மாயில் உள்ள சிறிதளவு நீர் வற்றும்படி செய்யப்பட்டது. எந்தப் பயிரும் ஆரம்ப நிலையில் இல்லாமலும் பாசனம் தேவையில்லை என்ற நிலையிலும் இருந்தால் நிலங்களுக்கு பாதகமெதுவுமில்லை.

**வேளாண்மைக் கல்லூரிக்கு மாணவர்கள் தேர்வு**

* 77 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

**விவசாயக் கல்லூரியில் மாணவர்கள் எந்தெந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறுர்கள் ?**

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** எம்.எல்லி. படிப்பிற்கான நிபந்தனைகள். வயது 19 ஆண்டும் ஆறு திங்களுக்கும் மேல் இருக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்டதொரு பல்கலைக் கழகத்தில் வேளாண்மை பட்டப்படிப்பில் முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பில் தேறியிருக்க வேண்டும். பட்டப் படிப்பில் மூன்ருவது வகுப்பில் தேறியவராளுல் ஐந்துவருடம் வேளாண்மை ஆராய்ச்சியில் அனுபவம் பெற்று குறைந்தது ஐந்து ஆராய்ச்சிகளில் கட்டுரைகள் எழுதியிருந்தால் வேளாண்மை பட்ட மேற்படிப்பிற்கு தகுதியுடையவராகலாம். ஒவ்வொரு மாணவருக்கும் 100 மதிப்பெண் தேவைப்படுகிறது. தற்போது ஹரிஜன மாணவர்களுக்கு 18 சதவீதமும் மற்ற பின்தங்கிய வகுப்பினருக்கு 31 சதவீதமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பி.எஸ்சி. மாணவர்களுக்கு வயது 15 ஆண்டு ஆறு மாதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டும். சென்னை, மதுரை அண்ணுமலைப் பல்கலைக் கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்டதொரு பல்கலைக் கழகத்தில் புகுமுக வகுப்பில் தேர்வு பெற்றிருக்க வேண்டும் அல்லது அதற்கு ஈடான தகுதி பெற்றிருக்க வேண்டும். முன்ரும் பார்ட் பௌதீகம், இரசாயனம், தாவரயியல், விலங்கியல், உயிரியல் இவற்றில் இரண்டாவது தகுதி பெற்றவராக மார்க் பெற்றிருக்க வேண்டும். இவற்றிலும் ஹரிஜன மாணவர்களுக்கு 18 சதவீதமும், பிற்பட்ட வகுப்பினருக்கு 31 சத வீதமும் இடங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.